வருகிறார்கள். அவசியம் ஏற்பட்டால், இன்னும் வெளிநாட்டு நிபுணர்களை வரவழைக்கத் தயங்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மணிமுத்தா நதிப் பாலம்

*506 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலத்தில் மணிமுத்தா நதி பாலத்திற்கு இரு மருங்கிலும் நடைபாதை (foot bridge) அமைக்க திட்டமுண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா: பாலத்தில் இருமருங்கிலும் நடைபாதை அமைக்கும் திட்டம் எதுவும் தற்பொழுது இல்லை.

வைகை கால்வாயை நவீனமாக்குதல்

*512 கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி: கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வைகை கால்வாயை நவீனமாக்குவதற்கான திட்டம் ஏதேனுமுண்டா?

(இ) ஆமெனில், வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

கனம் திரு. வெ. ராமைய்யா: (அ) & (இ) கனம் அங்கத்தினர் கேட்ட 219-ம் எண் கேள்விக்கு 18—11—1963-ல் சட்ட சபையில் அளிக்கப்பட்ட பதிலைப் பார்க்கும்படி அவரைக் கேட்டுக் கொள்கிறேன். வைகைக் கால்வாய்களைப் புதுப்பிக்கும் புதிய திட்டங்களை பாசனத் தலைமை என்ஜினியர் மேலும் பரிசீலனை செய்து வருகிறார். இத்திட்டம் கூடிய விரைவில் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி: சார், இது கடந்த இரண்டு ஆண்டு காலமாக பரிசீலனையில் இருந்து வருகிறது. 1963-ம் வருஷ பட்ஜட்டிலேயே இதற்குப் பணம் ஒதுக்கி இருந்தது; 1964-ல் கூட ஒரு திட்டமும் இல்லை. இந்த துணை மதிப்பீட்டிலாவது இருக்குமோ என்று பார்த்தால், அதுவும் இல்லை. இந்த நெருக்கடியான காலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லும்போது, இது அவசியம் என்று கருதி விரைவில் இதை ஏற்று நடத்த முயற்சி செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்த திட்டத்தைக் குறித்து மிக அதிகமான கவனமும் கருத்தும் அரசாங்கம் செலுத்தி வருகிறது. காரணம் இந்த திட்டம் அமையும்போது அந்த வட்டாரத்தின் நீர்ப்பாசன தேவை பூர்த்தி ஆக வேண்டும். இது ஒரு சரிபடுத்தும் திட்டம். முதலில் இதைக் கொஞ்சம் செலவில் செய்தால் போதும் என்று நினைத்தார்கள், பின்னால் வைகை அணை வந்ததின் காரணமாக ஏற்பட்ட புது மாறுதலுக்குப் பிறகு இந்தச் சீர் செய்யும் திட்டம் மிக்க லாபகரமாக அமையவேண்டும்

21st July 1964]

என்று விசேஷ அதிகாரிகளை நியமனம் செய்து இதை விரிவாக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவசரப்பட்டு, சென்ற வருஷமே எதிர்பார்த்தோம் இந்த வருஷமும் வரவில்லை என்றெல்லாம் நினைக்கக் கூடிய மனப்பான்மை கனம் சீமைச்சாமிக்கு மட்டுமின்றி, மற்ற அங்கத்தினர்களுக்கும் இருக்குமேயானால், நீர்ப்பாசன வேலைகள் பொருத்த மட்டில், நம் இராஜ்யத்திற்கு லாபமாக அமையாது.

வைகை நீர்த்தேக்கத்தின் கீழுள்ள ஆயக்கட்டு

* 513 கேள்வி.—திரு. மா. இராசாங்கம்: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வைகை அணை வாய்க்கால் நீரை திருமங்கலம் தாலுக்கா விக்ரமன்குளம் கண்மாயில் இருந்து முதலைக்குளம் பெரிய கண்மாய்க்குப் பாயவிடாததற்குக் காரணமென்ன?

THE HON. SRI V. RAMAIAH: Mudalaikulam Periya kanmoi lies outside the Vaigai Reservoir Project ayacut. Hence it is not entitled to Periyar waters.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: சார், இந்த முதலைக்குளம் சம்மந்தமான திட்டம் வைகை கால்வாய் திட்டத்தில் ஆரம்பத்தில் இருந்து பிறகு கைவிடப்பட்டிருக்கிறது ஏன் என்று தெரியவில்லை. இதைச் சேர்க்க அமைச்சர் முயற்சி எடுப்பார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இப்பொழுது கண்மாயைப் பற்றிய கேள்விக்கு, திட்டம் இல்லை என்று பதிலளித்தேன். அங்கத்தினர் சொல்வது பற்றி மறு பரிசிலனை செய்ய நியாயம் இருந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும். தனிக் கேள்வி போட்டால், விசேஷமாகப் பரிசிலனை செய்து பதில் சொல்ல முடியும்.

கிராமத் தொண்டர் படை

* 581 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதி அன்று துவக்கிய கிராமத் தொண்டர் படையில் சேர்ந்துள்ள தொண்டர்கள் எத்தனை பேர்?

(இ) தலைமைத் தொண்டர்கள் எத்தனை பேர்?

(உ) சூதாட்டம்; கள்ளக்கடத்தல்; சாராயம் காய்ச்சுதல்; கறுப்பு வியாபாரம் செய்வோர் போன்ற நாட்டின் தீய சக்திகளை களைவதற்கு வேண்டிய வேலைகளில் ஈடுபட இவர்களுக்கு அதிகாரம் வழங்க உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) கிராமத் தொண்டர் படையில் சேர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை 1,472,533.

(இ) தலைமைத் தொண்டர்களின் எண்ணிக்கை 15,058.

(உ) இல்லை